DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.153/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : சுரேஷ்குமார்
Father/ Husband Name : சுந்தரமாணிக்கம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது சாலைக்கிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 12.01.2021-ம் தேதி 19.00 மணிக்கு தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த பொழுது தேவகோட்டை தாலுகா திருப்பாக்கோட்டை அஞ்சல் செட்டியேந்தல் கிராமத்தை சேர்ந்த சுப்பையா மகன் துரைராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்றஎண்.11/2021 இதச.பிரிவுகள் 427, 506(2), 294(b) -ன்படி வழக்கின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் மறுநாள் 13.01.2021-ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் அமுதவள்ளி, கலைச்செல்வி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சாட்சிகள் துரைராஜ், நவமணி, ரவி, மணிமங்கலம், பாரத மணி அமுதவல்லி, கலைச்செல்வி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் இருவரும் தலைமறைவாக இருந்ததால் தலைமறைவு குற்றவாளிகளில் எதிரி.1 இருதய

ரஜினி, இளஞ்சிறார் ஆரோக்கிய ரெக்ஸி ஆகியோர் மீது குற்ற இறுதி அறிக்கைகளை இந்நீதிமன்றத்திலும் இளஞ்சிறார் நீதி குழுமத்திலும் 15.02.2021-ம் தேதி தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 தேவகோட்டை நகர பகுதியில் வசிப்பவர் இல்லை என்றால் சரிதான். அ.சா.1னின் ஊரான செட்டியேந்தலுக்கும் தேவகோட்டை நகருக்கும் சுமார் 50 கி.மீ. தூரம் இருக்குமென்றால் தெரியாது. அ.சா.1 12.01.2021 அன்று மாலை 07.00 மணிக்கு புகார் கொடுத்தார். சம்பவம் 12.01.2021 அன்று 13.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. நான் சம்பவ இடத்திற்கு சம்பவத்திற்கு மறுநாள் தான் சென்றேன் என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தில் நான் உடைந்த போன எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை நான் புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 பாரதமணியின் அதிகார முகவர் என்பதை அ.சா.1 சொல்லிதான் தெரிந்து கொண்டேன் என்றும் ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, ஆவணத்தின் நகல் ஒன்றை விசாரிக்கும் போது தாக்கல் செய்துள்ளார்.

3. மேற்படி ஆவணம் வழக்கு தாக்கல் செய்வதற்காக மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், சொத்தை பராமரிப்பதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் சம்பவ நடைபெற்ற வீட்டில் யார் குடியிருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி குடியிருப்பதாக தெரிந்து கொண்டேன்.

4. எதிரி குடியிருக்கும் வீட்டிலிருந்து அவரை சட்டப்புறம்பாக காலி செய்யக்கூடாது என்று சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 புகாரில் எந்தெந்த பொருட்கள் உடைந்தது என்று விவரத்தையும் அதற்கான புகைப்படங்களையோ கொடுத்தாரா என்றால் எந்தெந்த பொருட்கள் உடைந்தது என்று சொல்லியுள்ளார், புகைப்படங்கள் கொடுக்கவில்லை.

5. வரைபடத்தில் பொருட்கள் உடைந்து கிடந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலே பொருட்கள் உடைக்கப்பட்டிருந்தால் பொருட்களை சேதப்படுத்தியதற்கான சட்டப்பிரிவை

சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பாரத மணி அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சம்பவத்தன்று சம்பவத்தின் போது அ.சா.1 முதல் 3 சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. எதிரியை காலி செய்ய வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.